# தீமோத்தேயு. தீத்து நிருபத்தின்

## குறிப்புகள்




சகோ. R. ஜோஸ்
கன்னியாகுமரி
கிறிஸ்துவின் சபை

# தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதின முதலாம் நிருபம்

## முன்னுரை:

பவுல் தீமோத்தேயுக்கு எழுதின இந்த முதலாம் நிருபம் சபையில் ஒரு ஊழியர் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்பதையும், விசேஷமாக இளம் ஊழியர்கள் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்பதையும் நமக்கு காண்பிக்கிறது.

பவுல் தனது இரண்டு ஆண்டுகள் ரோமபுரி சிறையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு (அப் 28:30,31), பவுலும் தீமோத்தேயும் எபேசு நகருக்கு சென்றனர், பின்பு பவுல் தீமோத்தேயுவை அங்கு விட்டுவிட்டு, மக்கெதோனியாவிற்கு பயணத்தை தொடங்கினார் (1:4), இவர் இந்த நிருபத்தை அநேகமாக கி.பி 63-64 ல் மக்கெதோனியாவிலிருந்து எழுதியிருக்கலாம்.

## எழுதப்பட்டத்தின் நோக்கம்:

பவுல் மீண்டும் தீமோத்தேயுவிடம் வர திட்டமிட்டிருந்தார் (3:14), தான் எபேசுக்கு வருவதற்குத் தாமதமானால் தேவனுடைய சபையில் ஒரு ஊழியனாக (இளம்) எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தவே பவுலால் இந்த நிருபம் எழுதப்பட்டது (3:15)

திறவுக்கோள் வசனம் – 1 தீமோ 3:15

எபேசு சபையிலிருக்கிறவர்கள் வேற்றுமையான உபதேசத்தை போதியாதபடிக்கும், கட்டுகதைகளை கவனியாத படிக்கும், விசுவாசத்தை விட்டு விலகி போகாதபடிக்கும் இருக்க கட்டளையிட தீமோத்தேயுவுக்கு போதிக்கப்பட்டது ( 1:3-6). எபேசு சபையாருக்கு பவுல் முன்னமே இதை பற்றி கூறியிருந்தார்.

## பவுலும் தீமோத்தேயுவும்:

தீமோத்தேயு, பவுலின் இருதயத்தில் விசேஷித்த வகையில் இடம் பெற்றிருந்தார். (1:2). இவர் லீஸ்திரா நகரத்தை சேர்ந்தவராயிருந்தார் (அப் 16:1,2), இவரின் தாயும், பாட்டியும் தேவபக்தியுள்ள யூதப் பெண்களாய் இருந்தனர் ( அப் 16:2; 2 தீமோ 1:5; 3:15)

பவுலின் முதல் சுவிசேஷப் பயணத்தின் போது தீமோத்தேயு மன மாற்றப்பட்டிருக்கலாம் (1:2; அப் 14:6-23), பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தின் போது லீஸ்திரா வழியாக சென்ற வேளையில், தன்னுடைன் ஊழியத்திற்கு தீமோத்தேயுவை அழைத்து செல்ல விரும்பினார் ( அப் 16:1-3). தீமோத்தேயு பவுலுடன் ஊழியத்தில் இணைவதற்கு முன்பே சகோதரர்களால் நற்சாட்சி பெற்றிருந்தார். (அப் 16:2) யூதர்களின் நிமித்தமாக விருத்தசேதனம் பெற்றார் (அப் 16:3)

இந்த தீமோத்தேயுவை பவுல் விசுவாசத்தில் உத்தம குமாரனாய் பார்த்தார் (1:2; பிலி 2:22), பவுலுடன் இணைந்து ஊழியம் செய்த உடன் ஊழியனாக தீமோத்தேயு இருந்தார் , சபைகளை திடப்படுத்தும் வேளையை செய்தார், சபைகளை ஊக்கப்படுத்தும் வேளை செய்தார், பவுலின் பிரத்யேக தூதனைப்போல தீமோத்தேயு முக்கியமான பொறுப்புகளை பெற்றிருந்தார் ( 1 தெச 3:1-3; 1 கொரி 16:10; அப் 17:13-14)

### எபேசு சபையை பற்றிய குறிப்பு:

ரோமப்பேரரசின் ஆசியப் பகுதியில் மிகப்பெரிய நகரமாக விளங்கியது எபேசு பட்டணம், மிக முக்கியமான வியாபார ஸ்தலங்களை உள்ளடங்கிய துறை முகப்பட்டணமாக இருந்தது.

பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய போது பவுல் இந்த பட்டணத்துக்குள் முதல்முதலாக பிரவேசித்தார். (அப் 18:19), பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப்பயணத்தின் போது எபேசுவில் இரண்டு (அ) மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்தார் (அப் 19:10); இந்த பட்டணத்தில் யூதர்களும் வசித்து வந்தார்கள் (அப் 19:8,10,17).

## அதிகாரம் 1

## கற்பனையின் பொருளை உணராமல், வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து விலகி போகாமலிருக்கும் படியான கட்டளை

### 1. கள்ள உபதேசத்தை பற்றி எச்சரிப்பு (1:1-11)

அ. பவுலின் வாழ்த்துகள் (வ 1,2)

ஆ. தீமோத்தேயுவை எபேசு பட்டணத்திலிருக்க பவுல் வேண்டிக்கொண்டத்தின் நோக்கம் என்ன ?(வ 3,4)

1. வேற்றுமையான உபதேசங்களை போதியாத படிக்கு கட்டளையிட -

- வேற்றுமையான உபதேசம் என்பது என்ன? இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டு அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட உபதேசத்தை அல்லாமல் வேறேல்லா உபதேசமும் வேற்றுமையான உபதேசம் தான் ( 6:3; கலா 1:7,8; பிலி 3:17-19; 2 பேது 3:2; யூதா 17) இந்த வசனங்களை எல்லாவற்றையும் மத் 28:20 வுடன் ஒப்பிட்டு பார்க்கவும் .
- ஏன் சபைகளில் வேற்றுமையான உபதேசங்களை போதிக்க கூடாது? கிறிஸ்துவின் உபதேசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியுமே அல்லாமல் அவர் சொல்லாத (அ) கட்டளையிடாத உபதேசங்களினால் இரட்சிக்கப்பட முடியாது (யோவா 15:3), நம்மை நியாயத்தீர்க்கும் அதிகாரம் இயேசுவின் வார்த்தைக்கு மட்டுமே இருக்கிற படியால் (யோவா 12:48) வேற்றுமையான உபதேசங்களை போதிக்க முடியாது. தேவன் கட்டளையிடாத உபதேசத்தை போதிக்கிறவன் சபிக்கப்பட்டவன் (கலா 1:6,7; 2 பேது 2:1,2). தேவனால் கொடுக்கப்படாத காரியங்களை போதித்த அநேக நபர்கள் தேவனால் தண்டிக்கப்பட்டதை நம்மால் வேதாகமத்தில் பார்க்க முடியும் (லேவி 10:1,2; 2 இராஜா 17:21)
    - சமுதாயத்திற்காகவோ, நடைமுறைக்காகவோ தேவனுடைய வார்த்தையை மாற்றும் அதிகாரம் நம் கையில் இல்லை ( 2கொரி 2:17; 1 தெச 2:4)

2. கட்டுகதைகளையும், வம்ச வரலாறுகளையும் கவனியாத படிக்கு –

- யூதர்கள் பற்றி பேசுகிறார் (தீத்து 1:13)
- யூதர்கள் தங்கள் வம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் ( யோவா 4:12; யோவா 9:53; யோவா 8:5; மத் 3:9)

**குறிப்பு:** எபேசு சபையிலே யூத கிறிஸ்தவர்களும், புற ஜாதி கிறிஸ்தவர்களும் இருந்தார்கள் என்பது நாம் கவனிக்க வேண்டும் (எபே 2:17,28), சில யூதர்கள் கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டுமென கூறி கிறிஸ்தவர்களை விசுவாசத்திலிருந்து விழகச் செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தனர் (அப் 15:5; கலா 5:1-4). இதை தடுத்து நிறுத்தவே பவுல் மிகவும் முயற்சி செய்து கொண்டிருந்தார், இதற்காகவே தீமோத்தேயுவை எபேசுவிலே விட்டுவந்தார். ( 1:3 = 3:15)

இ. கற்பனையின் பொருளை பற்றி பவுல் கூறுதல் ( 1:5-11)

1. கற்பனையின் பொருள் என்ன? ( வ 5)   அன்பு பார்க்கவும் யோவா 14:23,24

- ஒருவர் தேவனுடைய கற்பனையின் படி நடக்கும் போதே அவர் தேவனிடம் அன்பு கூறுகிறார் ( 1 யோவா 5:3). அறிவாளிகளாய் கட்டுகதைகளை பேசி, விலகி போகிறவர்களை பார்க்கிலும் அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவரிடம் அன்பு கூறுபவர்களையே தேவன் விரும்புகிறார் (6:20; 1 கொரி 8:1)
- மத் 22:37 யை உபா 10:12,13; உபா 30:6-8 வுடன் ஒப்பிட்டு பார்க்கவும். அவருடைய வார்த்தையின் படி நடக்க தொடக்காத வரையிலும் அவரிடம் நாம் அன்பு கூறவேயில்லை என்பது தான் உண்மை.

2. இந்த அன்பு எவைகளிலிருந்து பிறக்க வேண்டும்? (வ 5)

- சுத்தமான இருதயத்திலிருந்து (எபி 10:22)
- நல்மனச்சாட்சியிலும் (1 யோவா 3:18 -22; மத் 22:28-31)
- மாயமற்ற விசுவாசத்திலும்  (தீத்து 1:15,16; லூக் 6:46)

குறிப்பு : இவை அனைத்தும்  கள்ளப் போதகர்களிடம் இல்லாதவைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

3. எபேசுவிலே சிலர் வீண் பேச்சுக்கு இடம் கொடுத்து விலகிப் போனார்கள் (வ 6; 1:3)

- எதுவெல்லாம் வீண் பேச்சாக இருக்கிறது?   வேற்றுமையான உபதேசம், கட்டுகதைகள், வம்ச வரலாறுகள்
- இந்த வீண்பேச்சுகள் எப்படிப்பட்டவைகள்?
  1. சீர்கேடானவைகள் (4:7)
  2. விபரீதம் (6:20)
  3. அவபக்தியாக்குகிறது (2 தீமோ 2:16)

4. கேட்டுகிறவர்களை கவிழ்த்துப் போடுகிறது (2 தீமோ 2:14; தீத் 1:10,11)
5. வீணானது (தீத்து 3:9)

4. நியாயப்பிரமாணத்தின் போதகராயிருக்க விரும்புகிறவர்கள் என்ன செய்கிறார்கள்? (வ 7)

தாங்கள் சாதிக்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் (2பேது3:16)

**கருத்து:** இரட்சிக்கப்பட நியாயப்பிரமாணத்தை சபையில் கைக்கொள்ள வேண்டும் என்கிற கருத்து இருந்தது ( அப் 15:1-3)

5. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டத்தின் நோக்கம் என்ன?(வ 8-11; கலா 3:19,24) அக்கிரமங்களினிமித்தம் கொடுக்கப்பட்டது, அது காவல் பண்ணியது

6. இந்த நியாயப்பிரமாணம் யாருக்காகவெல்லாம் கொடுக்கப்பட்டதாக பவுல் கூறுகிறார் (வ 8-11)

1) அக்கிரமக்காரருக்கும் (வ 9)
2) அடங்காதவர்களுக்கும் (வ9)
3) பக்தியில்லாதவர்களுக்கும் (வ9)
4) பாவிகளுக்கும்(வ9)
5) அசுத்தருக்கும்(வ9)
6) சீர்கெட்டவர்களுக்கும்(வ9)
7) தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும் (வ9)
8) கொலைபாதகருக்கும்(வ9)
9) வேசிக்கள்ளருக்கும்(வ10)
10) ஆண்புணர்ச்சிக்காரருக்கும்(வ10)
11) மனுஷரை திருடுகிறவர்களுக்கும் (வ10)
12) பொய்யாருக்கும்(வ10)
13) பொய்யாணை இடுகிறவர்களுக்கும் (வ10)
14) ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது (வ 11)

## 2. பவுலுக்கு கிடைத்த கிருபைக்காக அவரின் நன்றியுணர்வு மற்றும் மனத்தாழ்மை (1:12-17)

அ. பவுல் எதற்காக இயேசுவை ஸ்தோத்திரப்பதாக கூறினார்? (வ 12) இயேசு கிறிஸ்து பவுலின் மீது வைத்த நம்பிக்கைகாகவும், அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற மேன்மையான ஊழியத்திற்காகவும்.

ஆ. அவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்காக இந்த நன்றி உணர்வு அவரை என்ன செய்தது? (அப் 20:24; வ 16) இயேசுவிடமிருந்துப் பெற்ற இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக விரும்பினார், இதற்காகப் பிராணனைக் கூட அருமையாக எண்ணவில்லை.

இ. கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பாக பவுல் எப்படிப்பட்டவராய் இருந்ததாகக் கூறுகிறார் ? (வச 13; கலா 1:13-24))

1. தூஷிக்கிறவனாய் (அப் 26:11)
2. துன்படுத்துகிறவனாய் (அப் 22:4; அப் 26:10)
3. கொடுமைப்படுத்துகிறவனாய் (அப்9:1; அப் 8:3)

**கருத்து:** பவுல் செய்தத் தவறையே நாமும் கூட செய்திருப்போமா? நாமும் இயேசுவை தூசிக்கிறவர்களாக, துன்படுத்துகிறவர்களாக, கொடுமைப்படுத்துகிறவர்களாக இருந்தோமா? நாம் பாவச் செய்யவில்லை என்றால் அவர் ஏன் தூசிக்கப்பட வேண்டும்? துன்பப்பட வேண்டும்? கொடுமைப்படுத்தப்பட வேண்டும் (1 பேது 2: 22-24). பவுல் எப்படி நன்றியுடையவராயிருந்தாரோ அதைபோல நாமும் நன்றியுடையவராக செயல்பட வேண்டும் (அப் 20:24)

## 3. தீமோத்தேயுவுக்கான (ஊழியருக்கான) கட்டளை (1:18-29)

அ. நல்லப்போராட்டத்தைப் போராட என்ன தேவை என பவுல் கூறுகிறார்? (வ 18) விசுவாசமும், நல்மனச்சாட்சியும்

ஆ. விசுவாசமாகிய கப்பலை ஒருவர் எப்பொழுது சேதப்படுத்துகிறார்? (வ 19) நல்மனச்சாட்சியை தள்ளிவிடும் போது ; நல்மனச்சாட்சி என்பது தேவனுடைய வார்த்தையினால் ஒழுக்க ரீதியாக நல்லது கேட்டது எது என்பவற்றை வித்தியாசப்படுத்துகின்ற, நல்லவற்றை மேம்படுத்தி தீயவற்றை ஒழிக்கின்ற,நல்லதைபாராட்டி, கெட்டதைக் கண்டனம் செய்கின்ற ஆத்துமா (மனச்சாட்சி) பார்க்கவும் (ரோம 2:15; யோவா 8:9; அப் 23:1; 1 யோவா 3:20-21)

உதாரணம் – யோசேப்பு (ஆதி 39:9); மருத்துவச்சிகள் (யாத் 1:15); மோசே (எபி 11:25)

## அதிகாரம் 2

## 1. ஜெபத்தின் முக்கியத்துவத்தை பற்றி பவுலின் அறிவுரை (2:1-8)

அ. யாருக்காகவெல்லாம் நாம் ஜெபிக்க வேண்டும்? (வ 1,2)

1. எல்லா மனுஷருக்காகவும் (வ 1)
   - நிந்திக்கிறவர்களாகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் (மத் 5:44)
   - சபையாருக்காக ( 2 தீமோ 1:3; 1 தெச 1:3,4)
   - ஊழியத்திற்காகவும், ஊழியருக்காகவும் (எபே 6:18-20)
   - பலவீனருக்காக (யாக் 5:13-16)
   - படித்தவர் , படிக்காதவர்
   - ஏழை, பணக்காரன்
   - கருப்பர், வெள்ளையர்
   - கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாதவர்
2. ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளவர்களுக்கும் (வ 2) (ரோ 13:1-7)
3. ஏன் இவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (வ 2)
   - எல்லா பக்தியோடும்
   - நல்லொழுக்கத்தோடும்
   - கலகமில்லாமல்
   - அமைதுள்ள ஜீவனம்பண்ண (மத் 6:13)
4. எல்லா மனுஷருக்காகவும் நாம் பண்ண வேண்டிய காரியங்களை பட்டியலிடவும்? (வ 1)
   - விண்ணப்பங்கள் (பிலி 4:6)
   - ஜெபம் (லூக் 22:42)
   - வேண்டுதல்கள் – பரிந்துரை (ரோம 8:21)
   - ஸ்தோத்திரங்கள் ( 2தீமோ 1:3,4; பிலி 4:6)

ஆ. தேவனுடைய சித்தம் என்ன? (வ 3,4)

1. எல்லா மனுஷரும் இரட்சிக்கபட வேண்டும்
2. சத்தியத்தை அறியும் அறிவை அடைய வேண்டும்

இ. நமக்கு மத்தியஸ்தராய் இருப்பது யார்? அவர் நமக்காக என்ன செய்கிறார்? (வ 5,6)

1. கிறிஸ்து இயேசு நம்முடைய மத்தியஸ்தராய் இருக்கிறார் (வ 6)
2. அவருடைய மரணத்தினால் நம்மையும் தேவனையும் இணைத்திருக்கிறார் (வ 6)
3. நமக்காக வேண்டுதல் செய்கிறார் (எபி 7:25; லூக் 22:31,32)
4. பரிந்து பேசுகிறார் (1 யோவா 2:1)
5. இயேசுவின் நாமத்தினாலேயே நாம் தேவனிடம் பேசுகிறோம் (ஜெபம்) ( யோவா 16:23,24)
6. நம்முடைய ஜெபங்களை, தூதர்கள் தேவனிடம் கொண்டு செல்லவும், அதின் பதில்களை நமக்கு கொண்டு வரவும் செய்கிறார்கள். (வெளி 8:3-5; தானி 9:14-23; லூக் 22:42,43), மத்தியஸ்தராய் இருப்பது இயேசுவே (யோவா 1:51)

**குறிப்பு:** மத்தியஸ்தர் என்பவர் இரண்டு விதமான நபர்களுக்கு இடையில் இருப்பவர். இந்த மத்தியஸ்தர் இரண்டு விதமான நபர்களையும் சரியாக புரிந்திருத்தால் மாத்திரமே மத்தியஸ்தராய் இருக்க முடியும். இயேசுவே மேன்மையான மத்தியஸ்தர் (எபி 2:14-18)

## 2. ஆராதனையில் ஆண்கள் மற்றும் பெண்களின் வேலைகள் (2:8-15)

அ. புருஷர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் எவை? (வ 8)

1. கோபமும் (யாக் 1:20; எபே 4:26; நீதி 14:17,29)
2. தர்க்கமுமில்லாமல் (1 தீமோ 6:3,4; தீத் 3:9)
3. பரிசுத்தமான கைகள் (1 தீமோ 5:22; எசே 3:20)
4. எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டும்

ஆ. ஸ்திரிகள் எவைகளினால் தங்களை அலங்கரிக்காமல் எவைகளினால் அலங்கரிக்க வேண்டும்? (வ 9,10 = 1 பேது 3:3)

1. தங்களை அலங்கரியாமல் (வ 9)
   - மயிரை பின்னுதல்
   - பொன்னினாலாவது
   - முத்துகளினாலாவது
   - விலையெறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது
2. தங்களை அலங்கரிக்க வேண்டும் (வ 10)
   - தகுதியான வஸ்திரம்

- நாணம் ( 1பேது 3:4)
- தெளிந்த புத்தி (தீத்து 2:5)
- தேவபக்திக்கேற்ற ஸ்திரிகளுக்கான நற்கிரியை ( 1 பேது 3:5-7)
- அடக்கம் (வ 11)

இ. எதற்குவெல்லாம் பெண்களுக்கு உத்தரவு இல்லை என பவுல் கூறுகிறார் ? (வ12)

1. உபதேசம் பண்ண ( 1 கொரி 14:34)
2. புருஷன் மேல் அதிகாரம் செலுத்த

**குறிப்பு:** பெண்கள் ஆண்களுக்கு உபதேசம்பண்ணவும், அதிகாரம் செலுத்தவும் அவர்களுக்கு உத்தரவு இல்லை. அவர்கள் ஆராதனை நேரத்தில் இருபாலர்களும் (ஆண்கள், பெண்கள்) கூடிவரும் போது பெண்கள் ஆராதனையை வழி நடத்தவும், பிரசங்கம் பண்ணவும், ஜெபத்தில் வழி நடத்தவும் அவர்களுக்கு உத்தரவு இல்லை என்பதையும் இது காண்பிக்கிறது.

பெண்கள் பெண்களுக்கு போதிக்கவும், சிறுவர்களை வளர்த்து அவர்களை தேவனுடைய மனுஷனாய் வளர்க்கும் மிக பெரிய வாய்ப்பு (பொறுப்பு) கொடுக்கப்பட்டிருக்கிறது ( தீத் 2:3-5; 2 தீமோ 1:4,5; 1 தீமோ 2:15).

## அதிகாரம் 3

## 1. கண்காணிகளின் (மூப்பர்களின்) தகுதி அம்சங்கள் (3:1-7)

அ. கண்காணிப்பை விரும்புகிறவன் எதை விரும்புகிறான் (வ 1)?

1. நல்ல வேலையை விரும்புகிறான்
2. ஒவ்வொரு சபையிலும்; சபையை வழி நடத்துவதற்கு மூப்பர்கள் (அ) மேய்ப்பர்கள் (அ) கண்காணிகள் (அ) பாஸ்டர் நியமிக்கப்பட்டனர். ( 1தீமோ 3:1; அப் 14:23).
3. புதிய ஏற்பாட்டில் மூப்பர்களை குறிப்பிடும் போது அவை பன்மையிலிருப்பது, ஒரு சபையில் மூப்பர்கள் ஒன்றுக்கு மேற்ப்பட்டவரே இருக்க முடியும் என்பதை காண்பிக்கிறது (அப் 20:17; 24-31)

ஆ. மூப்பர்களின் வேலையை என்ன?

1. சபையை வழி நடத்த வேண்டும் (அப் 20:28; 1 பேது 5:2)
2. கண்காணிப்பு செய்ய வேண்டும் (1 பேது 5:3)
3. தேவனுடைய உக்கிராணக்காரனாய் இருக்கிறார்கள் (தீத் 1:3), இது இவர்களின் மிகப்பெரிய பொறுப்பை காண்பிக்கிறது
4. சபையில் பிரட்சனைக்கு தீர்வு காண்பிக்கிறவர்களாக (வசனத்தினாலே) இருக்கிறார்கள் (அப் 15:2-6)
5. அவர்கள் விசாரணை செய்ய வேண்டியதாக இருக்கிறது ( 5:17), இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரவான்கள் பார்க்கவும் யாக்கோபு 5:14
6. ஆத்துமாக்களுக்காக விழித்திருக்க கூடியவர்கள் (எபி 13:17)

இ. மூப்பர்களின் தகுதியம்சங்களை பட்டியலிடவும் (3:2-7)

1. குற்றஞ்சாட்டப்படாதவன்
2. ஒரே மனைவியை உடைய புருஷன்
3. ஜாக்கிரதையுள்ளவன்
4. தெளிந்த புத்தியுள்ளவன்
5. யோக்கியதையுள்ளவன்
6. அந்நியரை உபசரிக்கிறவன்
7. போதகசமர்த்தன்

8. மதுபானப்பிரியனாய் இருக்க கூடாது
9. அடிக்கிறவனாயிருக்க கூடாது
10. இழிவான ஆதாயத்தை இச்சிக்க கூடாது
11. பொறுமையுள்ளவனாயிருக்க வேண்டும்
12. சண்டைபண்ணாதவனாயிருக்க வேண்டும்
13. பண ஆசையில்லாதவனுமாயிருக்க வேண்டும்
14. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடந்த வேண்டும்
15. நூத சீஷனாயிருக்க கூடாது
16. நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும்

## 2. உதவிக்காரருக்கான தகுதி அம்சங்கள் (3:8-13) (பிலி 1:1)(அப் 6:1-6)

1. இரு நாக்குள்ளவர்களாயிருக்க கூடாது
2. மதுபானப்பிரியராயும் இருக்க கூடாது
3. இழிவான ஆதாயத்தை இச்சிக்க கூடாது
4. நல்லொழுக்க முள்ளவர்களாயிருக்க வேண்டும்
5. சுத்த மனச்சாட்சி
6. குற்றஞ்சாட்டப்படாதவர்கள்
7. ஒரே மனைவியையுடைய புருஷன்
8. தன் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்

## 3. இந்த நிருபத்தை எழுதுவதற்கான காரணம் (3:14-16)

அ. தேவனுடைய வீடாயிருப்பது எது? அது எதற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது (வ 15)

1. சபை தேவனுடைய வீடாயிருக்கிறது (எபே 2:19-21)
2. சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது

**குறிப்பு:** சபையே சத்தியத்திற்கு (தேவனுடைய வசனத்திற்கு) அடிப்படை ஆதாரமாயிருக்கின்றது. சபையின் மூலமாக சத்தியம் வெளியாக்கப்படுகிறது (எபே 4:12,13; எபே3:10). இன்று தேவனுடைய சத்தியத்திற்கு எதிராக அநேக தவறான, மாறுபாடான கள்ள உபதேசங்கள் இருக்கலாம். ஆனால் இயேசுவினால் உருவாக்கப்பட்ட சபையே சத்தியத்திற்கு தூணாயிருக்கிறது, ஆதாரமாயிருக்கிறது.

## அதிகாரம் 4

### 1. வஞ்சிக்கிற ஆவிகள் மற்றும் பிசாசின் உபதேசங்கள் பற்றி எச்சரிப்பு (4:1-5)

அ. பிற்காலங்களில் யார் வருவார்கள் என பவுல் கூறுகிறார்?(வ 1;அப்20:2931)

1. மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர்
2. கள்ள உபதேசத்தை கொண்டு வருவார்கள், இப்படிப்பட்டவர்கள் சபையிலிருந்தும் வருவார்கள் (அப் 20:30), இவர்கள் கிறிஸ்து கட்டளையிடாத உபதேசங்களை போதித்து ஜனங்களை வசப்படுத்தி கொள்வார்கள். (யுதா 4)

ஆ. ஆவியானவர் வெளிப்படையாய் சொல்வது என்ன? (வ1)

பிற்காலங்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசத்திற்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டுவிலகிப்போவார்கள்

இ. அந்த பொய்யருடைய கட்டளை என்ன? (வ 2)

1. விவாகம் பண்ணாதிருக்கவும்
2. தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டும் எனவும் கட்டளையிடுவார்கள்

### 2. நல்ல ஊழியக்காரனாயிருப்பதற்கான வழிகள் (4:6-16)

அ. போதித்துக்கொண்டிரு (வ 6)

1. சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்க வேண்டும் (2 தீமோ 2:15)
2. உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்ள வேண்டும் (நிலைத்திருக்க வேண்டும்) (4:6,16; தீத் 1:9)
3. இயேசு கட்டளையிடாத உபதேசங்களை போதிக்க கூடாது (1தீமோ 6:3)

ஆ. தேவ பக்திக்கேதுவாக முயற்சிப்பண்ணு

1. தேவனுடைய வசனமே தேவ பக்தியை உண்டாக்குகிறது (அப் 20:32; தீத்து 1:3,4); தேவ பக்திக்கேதுவான அறிவை ஏற்ப்படுத்துவதே ஊழியக்காரனின் நோக்கம்

2. ஊழியர்கள் தேவ பக்தியை உண்டாக்குகிற கிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசத்தையே போதிக்க வேண்டும் (2தீமோ 6:3)
3. தேவ பக்தி இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் பிரயோஜனமானது ( 4:8)

இ. மாதிரியாயிரு (வ 12; தீத் 2:7)

1. வார்த்தையில் (4:6)
2. நடக்கையில் (எபே 4:22-24; யாக் 3:13)
3. அன்பில் (1:5; 1 தீமோ 6:11)
4. ஆவியில் (2 தீமோ 1:7; 1 தெச 5:19)
5. விசுவாசத்தில் ( 1 தீமோ 1:18; தீத் 1:14)
6. கற்பில் ( 2 தீமோ 2:22)

**கருத்து:** ஒரு நல்ல ஊழியக்காரனாய் இருக்கிறவர் ஆரோக்கியமான உபதேசங்களை போதித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதோடு அவர் தன்னுடைய மாதிரியை அவர்களுக்கு முன்பாக காண்பிக்க வேண்டும்; எப்படி ஆரோக்கியமான வசனத்தை கைக்கொண்டிருப்பது? என்பதை தன்னுடைய நடக்கையின் மூலமாக விசுவாசிகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்

ஈ. ஜாக்கிரதையாயிரு

1. வாசிக்கிறதில்
2. புத்திசொல்லுகிறதில்
3. உபதேசிக்கிறதில்

உ. அசதியாயிராதே (வ 14; 2 கொரி 4:16; ரோம 12:11; யோசு 18:3)

நல்ல ஊழியராய் தேவன் கொடுத்த இந்த ஊழியத்தில் பொறுப்பை பெற்றவர், அதற்கான தேவன் கொடுத்த வரத்தை (திறமை) பெற்றவர் ஊழியத்தில் அசதியாயிருக்கக் கூடாது (2 தீமோ 1:6)

ஊ. சிந்தித்துக்கொண்டிரு (வ 15)

எ. நிலைத்திரு (வ 15,16)

1. உபதேசத்தில் (2 தீமோ 1:13,14; 1 தீமோ 6:20)
2. போதிப்பதில் (2 தீமோ 2:2; 2தீமோ 2:8)
3. போதித்ததில் ( 1 தீமோ 4:6)

## அதிகாரம் 5

### சபையாரை ஒரு ஊழியர் எப்படி நடத்த வேண்டும் மற்றும் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும்

### 1. சபையிலுள்ள வித்தியாசமான வயதுடையவர்களிடம் ஒரு ஊழியர் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும்? (5:1,2)

அ. முதிர்வயதுள்ள ஆண்களிடம் (வ 1)

1. தகப்பனை போல புத்தி சொல்ல வேண்டும்

ஆ. பாலிய புருஷரை (வ 1)

1. சகோதரரை போல புத்தி சொல்ல வேண்டும்

இ. முதிர்வயதுள்ள ஸ்திரிகளிடம் (வ 2)

1. தாயைப் போல புத்தி சொல்ல வேண்டும்

ஈ. பாலிய ஸ்திரிகளை (வ 2)

1. எல்லா கற்புடன் சகோதரிகளை போல புத்தி சொல்ல வேண்டும்

### 2. விதவைகளிடம் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் (5:3-16)

அ. முதிர் வயதுள்ள விதவைகள் என்ன செய்ய வேண்டும்? (5:3-10)

ஆ. இளம் வயதுள்ள விதவைகள் என்ன செய்ய வேண்டும்? (5:11-16)

**3. மூப்பரை ஒரு ஊழியர் எப்படி நடத்த வேண்டும்? (வ 17-19)**

- இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரவனாய் எண்ண வேண்டும் (எபி13:17)
- அவரை கூலிக்குப் பாத்திரவனாய் எண்ண வேண்டும் (1 கொரி 3:8; 2 கொரி 9:9-14)
- மூப்பனுக்கு விரோதமாய் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக் கூடாது ( வ 19 )

**4. சபையில் பாவஞ் செய்தவர்களிடம் ஒரு ஊழியர் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும்? (வ 19-25)**

- பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கு முன்பாக கடிந்துக்கொள்ள வேண்டும் (வ 20, கலா 3:1); மற்றவர்களும் அந்த தவறை செய்ய கூடாது என்பதற்காகவும் ( 2 கொரி 7:8-11); மற்றவர்களுக்கு பயமுண்டாக வேண்டும் என்பதற்காகவும் அப்படி செய்ய வேண்டும் (அப் 5:10-14).
- பட்சபாதத்தோடே ஒன்றும் செய்ய கூடாது (வ 21; யோவா 8:4-11)
- விசாரிக்கும் முன் நிருணயம் பண்ண கூடாது (4:19)
- மற்றவர்கள் செய்யும் பாவத்திற்கு உடன்படகூடாது (5:22)
- பவுல் இவைகளை தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும், தெரிந்துக்கொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாகவும் உறுதியாய் கட்டளையிடுகிறார் (வ 21)

**5. தீமோத்தேயுவுக்கான அவருடைய பலவீனத்திற்கான அறிவுரை (5:23-25)**

## அதிகாரம் 6

### 1. சபையிலிருக்கும் எஜமான்களும், வேலைக்காரர்களும் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் (வ 1,2)

அ. வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று எண்ணிக்கொள்ள வேண்டும் (தீத் 2:9,10; 2 பேது 2:18)

ஆ. எஜமான்கள் தங்கள் சகோதரராயிருக்கிற வேலைக்காரர்களை அசட்டைபண்ணாமல், அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ் செய்யக்கடவர்கள் (எபே 6:9; கொலே 4:1; ரோம 12:8)

இ. ஏன் இப்படி செய்ய வேண்டும்?

தேவனுடைய நாமமும், உபதேசமும் தூஷிக்கப்பட கூடாது (1 பேது 2:18,19)

**கருத்து:** தேவனுடைய பிள்ளைகள் மூலமாய் தேவனுடைய நாமம் மகிமைப்படவும், அவர்களுடைய கிரியைகள் மூலமாய் தேவனும், அவருடைய ஆரோக்கியமான உபதேசமும் இந்த உலகத்திற்கு, பாவியான மக்களுக்கும் தெரிய வர வேண்டும் (மத் 5:14-16), ஆனால் நாம் முதலாளியோ அல்லது வேலைக்காரர்களோ நம்முடைய கிரியைகள் மூலமாய் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட கூடாது.

### 2. ஒரு ஊழியக்காரன் எவைகளை விட்டு ஓட வேண்டும் எவைகளை நாட வேண்டும் என பவுல் கூறுகிறார்? (வ 3-20)

அ. வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவனை விட்டு விலகு (வ 3-5; தீத் 3:10).

1. வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவர்கள் எவைகளை ஒப்புக்கொள்ள மாட்டர்கள்? (வ 3; 1:3-7)
    - இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசங்களையும்
    - தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும்
2. வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்? (வ 4,5)
    - இறுமாப்புள்ளவன் (கொலே 2:19; 2 பேது 2:10)
    - ஒன்றும் அறியாதவன் ( யுதா 10; 2 பேது 2:12)

- தர்க்கங்களையும், வாக்குவாதங்களையும் பற்றிய நோய் கொண்டவன் (யுதா 9; 2 பேது 2:10,11)
- கெட்ட சிந்தையுள்ளவர்கள் (2 பேது 2:13-14)
- தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்கள் (2பேது 2:14-16)

3. இவைகளால் என்னவெல்லாம் உண்டாகிறது (வ 4,5)
   - பொறாமை
   - சண்டை
   - தூஷணம்
   - பொல்லாத சம்சயங்கள்
   - மாறுபாடான தர்க்கங்கள்

ஆ. பணத்தை குறித்தும், ஐஸ்வரியத்தை குறித்தும் ஒரு ஊழியர் எப்படி கருத வேண்டும்? (வ 6-10)

1. நமக்கு எப்படிப்பட்ட மனது இருக்க வேண்டும்?ஏன்? (வ 6-8)
   - பொதுமென்கிற மனதும், தேவபக்தியும்( நீதி 15:16; சங் 37:16; எபி 13:5)
   - ஏனென்றால் உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து ஒன்றும் கொண்டுபோவதுமில்லை (வ 7; பிர 5:15; சங் 49:16-20)
   - தேவன் நம்முடன் இருந்து நமக்கு தேவையான எல்லாவற்றையும் கொடுத்துக்கொண்டே இருக்கிறார் (எபி 13:5,6; மத் 6:32-34)
2. ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் எதில் எல்லாம் விழுகிறார்கள் (வ 9; 2 இராஜா 5:21-27; நீதி 23:4,5)
   - சோதனையிலும் கண்ணியிலும்
   - மனுஷரைக் கேட்டிலும்
   - அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும்
   - சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்
3. பண ஆசை எப்படிப்பட்டதாக இருக்கிறது?
   - பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது (நீதி 21:6)
   - சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு விலகிபோகிறார்கள்
   - அநேக வேதனைகளாலே தங்களை உருவ குத்திக்கொண்டிருக்கிறார்கள்

இ. ஒரு ஊழியர் எவைகளையெல்லாம் நாட வேண்டும்?(வ11-13)

1. நீதியையும்
2. தேவபக்தியையும்
3. விசுவாசத்தையும்
4. அன்பையும்
5. பொறுமையையும்
6. சாந்தகுணத்தையும்
7. விசுவாசத்தில் நல்ல போராட்டத்தை போராடு
8. நித்தியஜீவனைப் பற்றிக்கொள்
9. இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும் இந்த கற்பனையை மாசில்லாமலும், குற்றமில்லாமலும் கைக்கொள்ள வேண்டும்

## 3. நிறைவான கட்டளைகள் (6:14-21)

அ. தேவன் எப்படிப்பட்டவராய் இருக்கிறார் என பவுல் கூறுகிறார்?(வ14-16; 1:17)

1. எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிறவர் (வ 14; அப் 17:25)
2. நித்தியானந்தமுள்ளவர் (வெளி 4:9; எசா 9:6)
3. ஏகசக்கராதிபதி (சகல அதிகாரமுடைய) – அப் 7:48-49; எரே 10;6,10-13
4. ராஜாதி ராஜா (வெளி 17:14)
5. கர்த்தாதி கர்த்தா
6. ஒருவராய் சாவாமையுள்ளவர் (வெளி 4:9; சங் 102:26,27)
7. சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர்
8. மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் (யோவா 1:18)

ஆ. ஐசுவரியவான்கள் என்ன செய்ய வேண்டும்? மற்றும் என்ன செய்ய கூடாது? (வ17-19)

1. இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாய் இருக்க கூடாது (சங் 10:1-5)
2. நிலையற்ற ஐஸ்வரியத்தின் மேல் நம்பிக்கை வைக்க கூடாது( சங்49:16 – 20; நீதி 11:28; சங் 62:10)
3. ஜீவனுள்ள தேவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் (சங் 62:8; எரே 17:5-7)

4. நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தராளமாய் கொடுக்கிறவர்களாயும் , உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்(வ 18)
5. நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ள வேண்டும்
6. வருக்காலத்திற்காகத் தங்கள் நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைக்க வேண்டும் (மத் 6:19,20; மாற் 10:30)

**“கிருபையானது உன்னோடே கூட இருப்பதாக. ஆமென்”**

# பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம்

## முன்னுரை:

பவுலால் தீமோத்தேயுக்கு எழுதப்பட்ட (1:1,2) இந்த இரண்டாம் நிருபம் ஒரு நல்ல தகப்பன் தனது கடைசி காலத்தில் தனக்குப்பிரியமான பிள்ளைகளை காண விரும்புவது போல பவுல் தீமோத்தேயுவையும், மாற்குவையும் காணும் படியான தனது விருப்பத்தை இந்நிருபத்தில் வெளிப்படுத்துகிறார் (4:9,11,21)

பவுல் இந்த நிருபத்தை ரோமபுரியில் இரண்டாம் சிறையிருப்பிலிருந்த போது கி.பி 66-67 குள் எழுதியிருக்கலாம் (1:17,18). இந்த நிருபம் முற்றிலுமாக முதல் நிருபத்திலிருந்து வித்யாசப்பட்டு காணப்படுகிறது.

கி.பி 64ல் ரோமபுரி தீப்பற்றி எரிந்தது மற்றும் இதற்கு நீரோ கிறிஸ்தவர்களை குற்றச்சாட்டி அவர்களை கொலை செய்தான். இவ்வேளையில் பவுல் ஒருவேளை துரோவா நகரில் (4:13) (அ) நிக்கொப்போல நகரில் (தீத்து 3:12) கைது செய்யப்பட்டு ரோமப்புரிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்

இந்த நிருபம் எழுதப்பட்ட கொஞ்ச காலத்தில் நீரோவினால் பவுல் கொல்லப்பட்டார் (4:6,7)

## நோக்கம்:

தீமோத்தேயுவின் ஊழியத்தை நிறைவேற்றும் படி அவரை திடப்படுத்தவும், உற்சாகப்படுத்தவுமே இந்நிருபம் பவுலால் எழுதப்பட்டது (2 தீமோ 2:2; 4:5)

**மைய கருத்து:**

உன் ஊழியத்தை நிறை வேற்று (4:5)

**இந்த நிருபத்தை எழுதும் போது பவுலின் நிலைமை**

- கட்டப்பட்டிருந்தார் (1:8)
- மரண தருவாய் (4:6)
- எல்லா மனிதரும் கைவிட்ட நிலைமை (1:15:4:16)
- தீமோத்தேயுவையும், மாற்குவையும் பார்க்க வாஞ்சையாயிருந்தார் (1:3; 4:9,11,21)

## அதிகாரம் 1

## 1. பவுல், தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துகிறார் (1: 1 - 2:26)

### அ. பவுல் தீமோத்தேயுவை ஊக்கப்படுத்துகிறார் (1:1-7)

1. பவுல் தீமோத்தேயுவை எப்படி அழைக்கிறார்? (வ 2)
   - பிரியமான குமாரன் (1:2)
   - விசுவாசத்தின் உத்தம குமாரன் (1 தீமோ 1:2)
   - பவுல் தீமோத்தேயுவின் மீது வைத்த அன்பை பார்க்க முடிகிறது (1:3)
2. பவுல் தீமோத்தேயுவிடம் எப்படிப்பட்ட விசுவாசம் இருக்கிறதாக கூறுகிறார்? (வ 4,5)
   - மாயமற்ற விசுவாசம்
   - இந்த விசுவாசம் தீமோத்தேயுவின் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், தாயாகிய ஐனிக்கேயாக்குள்ளும் நிலைத்திருந்தது
   - இந்த விசுவாசம் தீமோத்தேயுவுக்குள்ளும் இருந்தது
3. பவுல் தீமோத்தேயுவுக்கு எதை நினைப்பூட்டுகிறார் ? (வ6)
   - தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பி விடும் படி ( 1தீமோ 4:14)
   - தேவன் நமக்கு கொடுத்திருக்கும் வரமானது புதைத்து வைப்பதற்கானது அல்ல (மத் 25:25)
   - அது நமக்கு கொடுக்கப்பட்டிருப்பது ஒரு நோக்கத்திற்காகவே, அதை பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது, பயன்படுத்தாத எந்த பொருளும் எதற்குமே உதவாது (எஸ்த 4:14)
4. தேவன் நமக்கு எப்படிப்பட்ட ஆவியை கொடுத்திருக்கிறார் ? (வ 7)
   - பயமுள்ள ஆவியை கொடுக்க வில்லை (எபே 3:12; எபி 10:20)
   - பலமும், அன்பும் , தெளிந்த புத்தியுள்ள ஆவியை கொடுத்திருக்கிறார் (1 தீமோ 1:12; 1 யோவா 4:18; 1 பேது 4:7)

### ஆ. வெட்கப்படாமல் இருக்கும் படி தீமோத்தேயுவுக்கான அறிவுரை ( 1:8-18).

1. எதற்காகவெல்லாம் வெட்கப்பட கூடாது என பவுல் கூறுகிறார் ?(வ 8)
   - கர்த்தரை பற்றி சாட்சியை குறித்து (2:15)
   - கிறிஸ்துவுக்காக கட்டப்பட்டிருக்கிற பவுலை குறித்து
   - ஒநேசிப்போரு பவுலை குறித்து வெட்கப்பட வில்லை (1:16)

2. ஏன் வெட்கப்பட கூடாது? (வ 9-12)
    - கிரியை இரட்சிக்கவில்லை, சுவிசேஷமே இரட்சித்தது ஆகவே சுவிசேஷத்தை குறித்து வெட்கப்பட கூடாது (வ 9,10)
    - இந்த மிகப் பெரிய சுவிசேஷ வேளை நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (வ 10)
    - நமக்கு இருக்கிற அழைப்பையும், நம்மை அழைத்தவரையும் நாம் அறிந்துக்கொள்ளும் போது வெட்கப்பட முடியாது (வ 9, 12; எபே 4:1)
3. வெட்கப்படமால் என்ன செய்ய வேண்டும்? (வ 13-18)
    - விசுவாசத்தோடும், அன்போடும் வசனங்களை கைக்கொண்டிருக்க வேண்டும் (வ 11)
    - இந்த உபதேசம் என்னும் நற்பொருளை பரிசுத்த ஆவியினால் காத்துக்கொள்ள வேண்டும் (வ 14; 1 தீமோ 6:20; 1 தீமோ 1:18; கொலே 3:16)
4. ஒநேசிப்போரு பவுலுக்கு என்னவெல்லாம் செய்தார் (வ 16-18)
    - அநேகந்தரம் இளைப்பாற்றினார் (வ 16)
    - விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவில்லை (வ 16)
    - ஜாக்கிரதையாக பவுலை தேடிக் கண்டுபிடித்தார் (வ 17)
    - எபேசுவிலே பற்பல உதவிகளை செய்தார் (வ 18)

## 2. கிறிஸ்துவின் சேவகனின் பண்புகள் (2:1-26)

1. கிருபையில் பலப்பட வேண்டும் (வ 1)
2. ஒப்புவிக்கப்பட்டதை ஒப்புவிக்க வேண்டும்(வ 2) (1 தீமோ 1:18; 2:2)
3. நல்ல போர்சேவகனாய் தீங்கநுபவிக்க வேண்டும் (வ 5)
4. சட்டத்தின் படி மல்யுத்தம் பண்ண வேண்டும் (1:14; வ 5)
5. பயிரிட வேண்டும்; பலனில் பங்கடைய வேண்டும் (வ 6)
6. சுவிசேஷத்தைக் குறித்த தெளிவுடையவனாய் இருக்க வேண்டும் (வ8)
7. கிறிஸ்துவுக்காக பாடுகளை சகிக்கிறவனாய் இருக்க வேண்டும் (வ 10-13)
8. தேவனுக்கு முன்பாக உத்தம ஊழியக்காரனாயிருக்க வேண்டும் (வ 15-18)
9. தேவன் பயன்படுத்துகிற கனமான பாத்திரமாக இருக்க வேண்டும் (வ 19-21)
10. இச்சைகளை விட்டு ஓட கூடியவராக இருக்க வேண்டும் (வ 22-23)
11. கர்த்தருடைய ஊழியக்காரனாயிருக்க வேண்டும் (வ 24-26)

## 3. பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கின்றார் (3:1-4:8)

1. விசுவாச விலக்கம் குறித்து எச்சரிக்கை (3:1-9)
   - கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என பவுல் எச்சரிக்கின்றார் (வ 1)
   - மனுஷர்களின் மோசமான நிலையும், ஒரு ஊழியக்காரனாய் இவை விட்டு விலக வேண்டும் என பவுலின் அறிவுரை (வ 2-5)
   - சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்? (வ 6-9)
2. விசுவாசத்தை தற்காத்து கொண்டிரு (3:10-17)
   - துன்பங்கள் மத்தியில் கர்த்தர் துணை நிற்கிறார் (வ 10-12)
   - கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திருக்க வேண்டும் (வ 14,15; கொலே 2:6; யோவா 15:3-7)
   - தேறினவனாக இருக்க வேண்டும் (வ 16,17)
3. ஊழியத்தை நிறைவேற்றும்படி எச்சரிக்கையாயிரு (4:1-8)
   - ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம்பண்ண ஆயத்தமாயிருக்க வேண்டும் (வ 2; தீத் 2:1,8,15)
   - கள்ள போதகர்களும், அதை பின்பற்றுபவர்களும் பெருகினாலும் நீ உன் ஊழியத்தை நிறைவேற்று, உபதேசத்தின் படி நல்ல போராட்டத்தை போராடு (வ 3-7)
   - உனக்கான(நல்ல போராட்டத்தை போராடுகிறவர்களுக்கு) நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது (வ 8; 1 கொரி 9:25)

## 4. தனிப்பட்ட வேண்டுக்கொள் மற்றும் ஆசிர்வாதம் (4:9-22)

1. மாற்குவை அழைத்து வரும் படி வேண்டுக்கொள் (வ 11)
2. மேலங்கியையும்,புஸ்தகங்களையும், மற்றும் தோற்சுருள்களை கொண்டு வரும் படி வேண்டுக்கொள் (வ 13)
3. அலெக்சந்தர் என்பனை குறித்து எச்சரிக்கையாயிருக்கும் படி வேண்டுக்கொள் (வ 14,15)
4. எல்லாரும் கை விட்டாலும் தேவன் நம்முடன் இருக்கிறார் (வ 16-18)
5. மாரிகாலத்துக்கு முன் தீமோத்தேயு பவுலிடம் வரும் படி வேண்டுக்கோள் (வ 19-22)

## பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபம்

### முன்னுரை:

பவுலால் தீத்துக்கு எழுதப்பட்ட இந்த நிருபம்; (1:1,2) தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதல் நிருபத்தை போலவே இளம் ஊழியர் தேவனுடைய இராஜ்யத்தில் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்பதை காண்பிக்கிறது. கி.பி 65-66 யில் 1 தீமோத்தேயு எழுதப்பட்ட பின்பு எழுதப்பட்டிருக்கலாம்.

ரோமபுரியில் பவுல் தனது முதல் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு (அப் 28:29,30), இந்த காலகட்டத்தின் போது, பவுலும் தீத்துவும் கிரேத்தா தீவிற்கு பயணம் சென்றனர். பவுல் தீத்துவை குறைவாய் இருப்பதை நிறைவாக்குபடி அங்கே விட்டுச் சென்றார். (தீத்து 1:5)

கிரேத்தா தீவு என்பது மத்திய தரைக்கடலில் கிரேக்க நாட்டிற்குத் தென் கிழக்கில் அமைந்துள்ள ஒரு தீவு ஆகும். சுவிசேஷம் முதன்முதலில் பிரசிங்கப்பட்ட போது அங்கே(எருசலேமில்) கிரேத்தா தீவில் இருந்தும் மக்கள் வந்திருத்தனர் (அப் 2:11), ஒருவேளை அங்கு சிலர் மனமாற்றம் அடைந்து சுவிசேஷத்தைத் தங்கள் சொந்த தீவிற்கு எடுத்து சென்றிருக்கலாம், இந்த தீவார் ஒழுங்கற்ற வாழ்க்கையை வாழ்த்துக்கொண்டிருந்தனர்; இவர்கள் ஓயாப்பொய்யரும், துஷ்ட மிருகங்களும், பெறு வயிற்று சோம்பேறிகளுமாய் இருந்தனர் என அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியே சொல்லியிருக்கிறான் (1:12)

### எழுதப்பட்ட நோக்கம்:

போதித்தல் என்ற வார்த்தையை இந்நிருபத்தில் பவுல் அடிக்கடி பயன்படுத்துகிறார்; ஒரு இளம் ஊழியராக கிரேத்தா தீவிலிருந்த சபையானது ஆவிக்குரிய வளர்ச்சியை பெற அப்பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என தீத்துவுக்கு பவுல் ஆலோசனை சொல்கிறதாக இந்நிருபம் இருக்கிறது.

திறவுக்கோள் வசனம் : தீத்து 1:5

### தீத்துவை பற்றி குறிப்பு:

தீத்து கிரேக்கனாயிருந்தார் (கலா 2:3). இவர் பவுலுக்கு நல்ல உடன் ஊழியராக இருந்தார் (கலா 2:1). விருத்தசேதனத்தைக் குறித்த விஷயத்திற்காகப் பவுல் எருசலேமுக்கு போனப்போது அவரோடு கூட தீத்துவும் இருந்தார் (அப் 15:1-3; கலா 2:1). ஒருவேளை இவர் பவுலால் போதிக்கப்பட்டு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவராக இருக்கலாம் (1:2; பிலே 1:10) பவுலின் தூதுவனாக தீத்து கொரிந்திய நாட்டிற்கு பவுலின் மூன்றாம் சுவிசேஷ பயணத்தின் போது அனுப்பபட்டார் (2 கொரி 12:18),

கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதின முதலாம் நிருபத்தை கொரியந்தியர்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டனர் என்பதை அறியும் படிக்கு அனுப்பபட்டார் ( 2 கொரி 7:6-15). எருசலேமில் உள்ள பரிசுத்தவான்களுக்கு கொடுக்கும்படி பவுல் அவர்களை வேண்டிக்கொண்டார் ( 2 கொரி 8:6,16-17), பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்பட்ட தர்ம காரியத்தில் முக்கிய பங்கை தீத்து பெற்றிருந்தார் பவுலின் கடைசி காலத்தில் தீத்து தல்மாத்தியா நாட்டில் இருந்ததாக பவுல் கூறுகிறார் ( 2 தீமோ 4:10)

## அதிகாரம் 1

## சபையில் மூப்பர்களின் தேவை

### 1. இந்த நிருபத்தை எழுதுவற்கான காரணம் (வ 1-5)

அ. தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு என்ன உண்டாக வேண்டும்? அதற்காக தேவன் என்ன செய்தார்? (வ 3,4)

1. நித்திய ஜீவனை குறித்த நம்பிக்கைப் பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும்; விசுவாசமும் உண்டாக வேண்டும் (ரோம 16:25; எபே 3:6-11)
2. அதற்காக, பொய்யுரையாத தேவன் நித்திய ஜீவனை குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். ( 1 யோவா 2:25; 2 பேது1:4)
3. அதற்காக தேவனுடைய சுவிசேஷர்களையும், போதகர்களையும் ஏற்ற காலத்தில் ஏற்படுத்தியிருக்கிறார் ( 2தீமோ 1:9,10; எபே 3:6,10; மாற் 16:15,16)
4. சுவிசேஷம், உபதேசம் நமக்கு ஒப்புவிக்கபட்டுள்ளது (மத் 28:18-20; 1 தீமோ 1:11)

**கருத்து:** நித்திய ஜீவனுக்காக தேவன் எல்லாவற்றையும் ஆயத்தமாக்கியிருக்கிறார். அதை ஏற்ற காலத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார், இதற்காக சபையும், ஊழியர்களும் இருக்கிறார்கள் (எபே 3:10), ஜனங்கள் அதற்கு (சுவிசேஷத்திற்கு) கீழ்படிய வேண்டும்.

ஆ. பவுல் ஏன் தீத்துவை கிரேத்தா தீவிலே விட்டு வந்தார்? (வ 5)

1. குறைவாயிருக்கிறதை ஒழுங்குப்படுத்தும் படிக்கும் (1 தீமோ 3:15; 1 கொரி 14:40; பிலி 3:16)
2. பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்ப்படுத்தும் படிக்கும் (அப் 14:23)

### 2. மூப்பர்களின் தகுதிகள் (1:6-9)

அ. மூப்பர்களின் தகுதிகள் என்னென்ன? (வ 6-9)

1. குற்றஞ்சாட்டப்படாதவனும்
2. ஒரே மனைவியையுடைய புருஷன்
3. விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன்
4. தன் இஷ்டப்படி செய்யாதவனும்
5. முற்கோபமில்லாதவனும்
6. மதுபானப்பிரியமில்லாதவனும்

7. அடியாதவனும்
8. இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்
9. அந்நியரை உபசரிக்கிறவனும்,
10. நல்லோர்மேல் பிரியமுள்ளவனும்
11. தெளிந்த புத்தியுள்ளவனும்
12. நீதிமானும்
13. பரிசுத்தவானும்
14. இச்சையடக்கமுள்ளவனும்
15. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும்
16. எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவன்
17. தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்

**3. கள்ளப் போதகர்களை குறித்து எச்சரிக்கை (1:10-16)**

அ. கள்ளப் போதகர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறார்? (வ 10,11)

1. அநேகர் (2 பேது 2:2)
2. விருத்தசேதனமுள்ளவர்கள் (கலா 2:4; பிலி 3:2)
    - கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டும் என யூதர்கள் முயற்சி செய்தனர் (கலா 2:4; அப் 15:1-3; பிலி 3:2)
3. அடங்காதவர்கள் (அப் 13:10)
    - கீழ்படியாத, அடக்க முடியாத, கட்டுக்கடங்காத
4. வீண் பேச்சுக்காரர் ( 1 தீமோ 2:14-17; 1 தீமோ 6:20)
5. மனதை மயக்குகிறவர்கள் ( 2 தீமோ 3:7,8,13; 2 தீமோ 2:26; கலா 3:1)
6. இழிவான ஆதாயத்திற்காக தகாதவைகளை உபதேசிக்கிறவர்கள் ( 1 தீமோ 6:5)
    - யோசேபேல் (1 இராஜா 21:7-10)
    - கேயாசி ( 2 இராஜா 5:22)
    - பிலேயாம் (2 பேது 2:15,16; யுதா 11)
7. முழுக்குடும்பங்கள் கவிழ்த்துப் போடுகிறார்கள் ( 2 தீமோ 2:16-18)

**கருத்து:** இப்படிப்பட்ட கள்ளப் போதகர்கள் சபையில் எழும்பாமலிருக்க சபையில் ஆரோக்கியமான உபதேசத்தில் புத்தி சொல்ல, எதிர் பேசுகிறவர்கள்களை (1:9), கண்டனம் பண்ணவும் வல்லவர்களாய் மூப்பர்கள் இருக்க வேண்டும் ( 2 தீமோ 2:24-26)

ஆ. கீரேத்தா தீவார் எப்பட்டவர்களாயிருந்தனர் என அவர்களின் தீர்க்கதரிசியே கூறியிருக்கிறான்? (வ 12)

1. ஓயாப் பொய்யர்
2. துஷ்ட மிருகம்
3. பெரு வயிற்று சோம்பேறிகள்

இ. தீத்து எதை குறித்து கண்டிப்பாய் கடிந்துக்கொள்ள வேண்டும் என பவுல் கூறுகிறார்? ஏன்? (வ 13,14)

1. விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாய் இருக்கும்படி ( 2 தீமோ 1:14)
2. ஏனென்றால் கிரேத்தாவிலிருக்கிறவர்களின் ஒழுங்கற்ற தன்மையை (வ 12,16), இந்த (13,16) கள்ள போதகர்கள் பயன்படுத்தி இவர்களின் விசுவாசத்தை விட்டு விலக செய்துவிட கூடாது.

ஈ. கிரேத்தா தீவாரின் ஒழுங்கற்ற தன்மைகள் என்ன? (வ 16)

1. கிரியைகளினால் தேவனை மறுதலிக்கிறார்கள்
2. அருவருக்கப்படத்தக்கவர்களாயிருக்கிறார்கள்
3. கீழ்படியாதவர்களாயிருக்கிறார்கள்
4. நற்கிரியை செய்ய ஆகாதவர்களாயிருக்கிறார்கள்

## அதிகாரம் 2

### 1. நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளை பேசு (2:1-10)

அ. ஆரோக்கியமான உபதேசம் என்பது என்ன? (வ 1) இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட வசனங்களே ஆரோக்கியமான உபதேசங்கள் ( 1 தீமோ 6:3; 1 தீமோ 1:11; தீத் 1:1,13); அதாவது புதிய ஏற்பாடு (எபி 3:3; யாக் 1:25), இதுவே ஜீவனுடைய பிரமாணம் (ரோம 8:2), இந்த ஆரோக்கியமான, தூய்மையான தேவனுடைய உபதேசத்தை கலப்பாய் பேசுவது கூடாது ( 2 கொரி 2:17), கள்ள போதகர்களை போல ஆரோக்கியமற்ற உபதேசத்தை போதிக்க கூடாது

ஆ. முதிர் வயது ஆண்கள் எப்படி இருக்க வேண்டுமென புத்தி சொல்ல வேண்டும்? (வ 2)

1. ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க ( 2 பேது 1:4,5; லூக் 12:35-37)
2. நல்லொழுக்கமுள்ளவர்களுமாய் இருக்க (பிலி 4:8)
3. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க ( 1 பேது 1:13)
4. விசுவாசத்திலும், அன்பிலும், பொறுமையிலும் ஆரோக்கியமாய் இருக்க வேண்டும்

இ. முதிர்வயதுள்ள பெண்கள் எப்படி இருக்க வேண்டுமென புத்தி சொல்ல வேண்டிம்? (வ 3-5)

1. பரிசுத்தத்துக்கேற்ற நடக்கை நடக்க (1 தீமோ 5:5-10; 1 தீமோ 3:1)
2. அவதூறுபண்ணாதவர்களாய் இருக்க
    - தவறான குற்றம் சாட்டுதல்
3. மதுபானத்துக்கு அடிமையாகாமலிருக்க வேண்டும்
4. பாலிய ஸ்திரிகளுக்கு நற்காரியங்கள் போதித்து கொண்டிருக்க (வ 4-5)
    - 1 பேது 4:11

ஈ. பாலிய ஸ்திரிகள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும்? ( வ4,5)

1. புருஷரிடத்திலும், பிள்ளைகளிடமும் அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும் (எபே 5:25; எபே 6:4)
2. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் ( 1 தீமோ 2:10)
3. கற்புள்ளவர்களாய்
4. நல்லவர்களாய்
5. புருஷர்களுக்கு கீழ்படிகிறவர்களாய் இருக்க வேண்டும் (கொலே 3:18; எபே 5:22)

உ. பாலிய புருஷர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும் ?(வ 6)

1. தெளிந்த புத்தி ( 1பேது 5:8; 1 பேது 3:7)

**குறிப்பு:** தேவனுடைய வார்த்தையே ஒருவருடைய வாழ்க்கையில் தெளிவை, ஞானத்தை கொடுக்க கூடியது (சங் 19:7-11; 2 தீமோ 3:15)

ஊ. தீத்து எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என பவுல் புத்தி கூறுகிறார்? (வ7,8)

1. எல்லாவற்றிலும், நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பிக்க வேண்டும் (வ7)
   - வழி நடத்துகிறவர் சரியான மாதிரியை காண்பிக்க வேண்டியது அவசியம் (1 தீமோ4:12; 1 பேது 5:3)
   - இயேசு நமக்கான மாதிரியை வைத்திருக்கிறார் ( 1 பேது 2:21; 1 யோவா 1:3)
2. உபதேசத்தில் விகற்பமில்லாதவன்
3. நல்லொழுக்கமுள்ளவனாயிரு
4. ஆரோக்கியமான வசனத்தை பேச வேண்டும் (2:1)

எ. வேலைக்காரர்கள் எப்படிபட்டவர்களாய் இருக்க வேண்டும் என புத்தி சொல்ல வேண்டும்? (வ 9,10)

1. இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்க
   - எஜமான்களுக்குக் கீழ்படிய வேண்டும் (கொலே 3:22; எபே 6:5; 1பேது 2:18)
   - பிரியமுண்டாக நடந்துக்கொள்ள வேண்டும்
   - திருடாமலிருக்க வேண்டும் (எபே 4:28)
   - சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்க வேண்டும் (1பேது 2:12)

ஏ. நாம் எப்படிப்பட்டவர்களாய் இந்த உலகத்தில் வாழ வேண்டும்? ஏன்? (வ 11-15)

1. நாம் வெறுக்க வேண்டிய காரியங்கள்: (வ12)
   - அவ பக்தியை ( 2 பேது 2:5-9; ரோம 1:18; யுதா 14)
   - லௌகிக இச்சையை ( 2 பேது 1:4; 1 பேது 4:2; யுதா 22)
2. எப்படிப்பட்ட வாழக்கை வாழ வேண்டும் (வ12)
   - தெளிந்த புத்தியும் ( 1 பேது 1:13; 1 பேது 5:8)

- நீதியும் (1 தீமோ 6:11)
- தேவபக்தியும் ( 1 தீமோ 4:8)

3. ஏனென்றால்?(வ 13-14)
   - நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு காத்துக்கொண்டிருக்கிறோம் (வ 13)
   - நாம் அவருடைய சொந்த ஜனங்களாய் இருப்பதற்கும், நற்கிரியை செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் இருப்பதற்கு அவர் தன்னையே ஒப்புக்கொடுத்தார் (வ 14)

**குறிப்பு: (வ 15)** சீர்கெட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த கிரேத்தா தீவாருக்கு தீத்து எப்படி வாழ வேண்டும் என்பதை போதிக்க வேண்டியதாக இருந்தது அதைப்போல வாழ்ந்து காண்பிக்க வேண்டியதாக இருந்தது. எப்படியும் வாழலாம் என்பது மிருகத்தின் வாழக்கையாயிருக்கிறது , தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய சட்டத்தின் படியே வாழ வேண்டும்

## அதிகாரம் 3

**1. ஆளுபவர்கள் மத்தியில் எப்படி வாழ வேண்டுமென புத்தி சொல்லுதல்? (3:1,2)**

அ. எதை நினைப்பூட்டும் படி பவுல் தீத்துவுக்கு கூறுகிறார்? (வ 1,2)

1. துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் (ரோம 13:1-7; 1 பேது 2:13,14)
2. ஒருவனையும் தூஷியாமல் (கொலே 3:8)
3. சண்டைபண்ணாமல் ( 2 தீமோ 2:24)
4. பொறுமையுள்ளவர்களாய் (யாக் 5:10,11)
5. சாந்த குணத்தைக் காண்பிக்க வேண்டும் ( 1பேது 3:15)

**2. நமக்கு கிடைத்திருக்கும் தேவனுடைய கிருபை (3:3-7)**

அ. முற்காலத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாய் இருந்தோம்? (வ 3; எபே 2:1-5; 1 பேது1 :14)

ஆ. ஆனால் தேவனுடைய இரக்கத்தினாலும், மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நாம் இரட்சிக்கப்பட்டோம். இது தேவனுடைய ஈவு (வ 5-7; மாற் 16:15,16; எபே 2 :1-10)

**3. நற்கிரியை செய்ய புத்தி சொல்லு (3:8-14)**

அ. எவையெல்லாம் நன்மையும் பிரயோஜனமுமானவைகள் மற்றும் எவையெல்லாம அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கிறது? (வ 8-9)

1. தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்க வேண்டும், இவைகள் நன்மையும் பிரயோஜனமுமானவகள்
2. புத்தியீனமான தர்க்கங்கள், வம்ச வரலாறுகள், சண்டைகள் நியாயப்பிரமாணத்தை குறித்த வாக்குவாதங்கள்; இவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கிறது

ஆ. வேதப்புரட்டனாயிருக்கிறவனை பற்றி செய்ய வேண்டிய காரியம் என்ன? (வ 10,11; 1 தீமோ6:3,10,20)

**4. நிறைவான புத்திமதிகள் மற்றும் வேண்டுக்கோள்கள் ( 3:12-15)**

**“கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக”- ஆமென்**